**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.12 |
| Name | : | செந்தமிழ்செல்வன் |
| Father's /Husband Name | : | பாலசித்தன் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 46/2025 |

**தேதி : 25.03.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்து கடந்த 24.07.2024 அன்று காலை 10.30 மணிக்கு காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு என்னுடைய சொந்த வேலையாக நானும், பெருமாள்சாமி என்பவரும் சென்றிருந்தோம். மேற்படி அலுவலகத்தில் எங்கள் ஊரை சேர்ந்த வசந்தி என்பவரை போலீஸார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். போலீஸாரிடம் வசந்தி யார், யாரிடம் பணம் வாங்கினேன் என்றும், நகை வாங்கினேன் என்றும் சொன்னார். வசந்தி சொன்னதை சுமா என்ற காவலர் டைப் செய்தார். பாரி என்பவர் வசந்தியை விசாரித்தார். அதற்காக என்னை சாட்சி கையெழுத்து போடச்சொன்னார்கள். நானும், பெருமாள்சாமி என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம்.

**எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ. 43 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் வசந்தியின் வீட்டிற்கு மூன்றாவது தெருவில் வசித்து வருகிறேன். போலீஸார் என்னை எஸ்.பி அலுவலகத்திற்கு வரச்சொன்னார்கள் என்றால் சரிதான். என்னுடைய மனைவி எதிரியிடம் பணம் கொடுத்துள்ளார். காவலரின் பெயர் சுமா என்று போலீஸார் அவர் பெயரை சொல்லி கூப்பிட்டதன் பேரில் தெரிந்துகொண்டேன். பாரி என்பவரின் பெயரை அவருடைய சீருடையில் இருந்த பேட்ஜை பார்த்து தெரிந்துகொண்டேன். எதிரி யார், யாருக்கு எவ்வளவு தர வேண்டும் என்று தெரியாது. என்னுடைய மனைவிக்கு ரூ.2,40,000/- தரவேண்டும். போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன் என்றாலும், அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.